2286

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/93.

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 07
1993 மே மாதம் 12 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## வாழ்க்கைச் செலவுப்படி

1988.08.03ஆந் திகதிய 24/88ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக வெளியிடப்படுவது.

02. ரூபா.260/-வாழ்க்கைச் செலவுப்படி 1993 ஜூன் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து ஓய்வூதியம் பெறுநர்களில் பின்வரும் வகுதியினர்களுக்குக் கொடுபடும்.

(அ) 1987.12.31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்று, குறைக்கப்படாத மாத ஓய்வூதியமாக ரூபா. 1600/-இலு குறைந்த தொகையை வழங்கப் பெற்றவர்கள்.

(ஆ) 1988.01.01ஆந் திகதி முதல் 1992.12.31ஆந் திகதி வரை ஓய்வு பெற்று, குறைக்கப்படாத மாத ஓய்வூதியமாக ரூபா.2975 இலும் குறைந்த தொகையை வழங்கப் பெற்றவர்கள்.

(இ) 1993.01.01 அன்று அல்லது அதற்கு பின்னர் ஓய்வு பெற்று, குறைக்கப்படாத மாத ஓய்வூதியமாக ரூபா. 4060/-இலும் குறைந்த தொகையை வழங்கப் பெற்றவர்கள்/வழங்கப் பெறவுள்ளவர்கள்.

03. இக் கொடுப்பனவு ஓய்வூதியப் பணிப்பாளரால் வழமையாக ஓய்வூதியக் கொடுப்பனவு செய்யப்படும் அலுவலகங்களால் கொடுக்கப்படும்.

04. இச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.